# ICAR Krishi Vigyan Kendra

## (Hosted by CREED)

### Ariyalur District

**August 2026 Month Activities**

Date: 04.08.2026
Village: Mela Michealpatti
**Event: Impact collection of ST women beneficiaries under NABARD TDF Project**

1. Visited mela Michealpatti beneficiaries who benefitted with livelihood activities such as goat (5 Nos.), dairy (1No.), nutrition garden under Farm activities and tailoring, petti shop, eve tuition under non-farm activity during the year 2024.
2. Data collected for impact study from every beneficiaries for each and every activity and video documentation done.
3. Notable points observed during survey: ~Increase in income (i.e): Average of Rs.50,000 earned from goat rearing by selling kids, reducing commercial feed ratio introducing azolla, vermicompost production and other scientific practices, ~Average of Rs.47,000 from cow by milk production and calf sales. ~ Vegetable consumption increased, vegetable expenditures were reduced (Rs.500/week) and thus ensured nutritional security through organic vegetables.
4. Attracted central government scheme to the village for construction of new house and thus 10 houses are under constructions.
5. Tailoring fetches regular income for the women.
6. Through our support they extended their pettu shop with refrigerator facilities and earning an additional income of Rs.3,000 from Milk and curd sales.
7. Evening tuition supporting 26 school children which improves learning skill and reading ability.

Team: SMS (Ag. Extn), SMS (AS), SMS (H.Sc) and TDF PC








Date: 08.08. 2026

**Details : Popular article on effect of El-Nino management in Agriculture and Allied in Kalnadai Velanmai Tamil monthly magazine (August Edition)**

Author: SSH & SMS Ag

# எல்நினோ காலகட்டாங்களில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை கால்நடை சார்ந்த தொழில்நுட்பங்கள்

முனைவர் கோ. அழகு கண்ணன், திரு. மு. திருமலைவாசன்,
மரு. வெ. சரண்யா, முனைவர் அ. ராஜ்கலா,
கிரீடு வேளாண் அறிவியல் மையம், அரியலூர் மாவட்டம்

இந்தியாவில் எல்நினோ ஆண்டுகளில் தென்மேற்குப் பருவமழைக் குறைதல், அதிக வெப்பநிலை, நீண்ட வறட்சி இடைவெளி, நீர்ப்பற்றாக்குறை போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனால் பயிர் மகசூல் குறைதல், பூச்சி மற்றும் நோய்த் தாக்கம் அதிகரித்தல், கால்நடைத் தீனித் தட்டுப்பாடு போன்ற சவால்கள் உருவாகின்றன.

இந்தச் சூழலில், விவசாயிகள் காலநிலைக்கு ஏற்ற நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் மகசூல் இழப்பைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

**காலநிலைக்கு ஏற்ற பயிர்த் திட்டமிடல்:** இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) மற்றும் வேளாண் பல்கலைக்கழகங்களின் காலநிலை முன்னறிவிப்புகளை தொடர்ந்து கவனிக்க வேண்டும். குறைந்த தண்ணீரில் வளரும் பயிர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சிறுதானிய பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்துப் பயிரிடலாம். நீண்டகால நெல் இரகங்களுக்குப் பதிலாகக் குறுகிய கால இரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும். ஒரே பயிரை மட்டும் சாகுபடி செய்யாமல் பயிர்ப் பல்வகைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.



**வறட்சியைத் தாங்கும் இரகங்கள்:** சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளைப் பயன்படுத்த வேண்டும். வறட்சியைத் தாங்கும் நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர் இரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

| வ. எண் | பயிர் | இரகங்கள் |
|---|---|---|
| 1 | நெல் | அண்ணா 4, PMK 1, ADT 45, TKM 15 , ADT 39, ADT 36, TKM 13, கோ 52, ADT 59 |
| 2 | கம்பு | கோ 10, COH 10 |
| 3 | சோளம் | CO 34 |
| 4 | கேழ்வரகு | ATL 1 |
| 5 | வரகு | TNAU 86, ATL 1 |
| 6 | நிலக்கடலை | VRI 10 |
| 7 | எள் | VRI 4, VRI 5 |
| 8 | உளுந்து | வம்பன் 8, வம்பன் 9, வம்பன் 10, வம்பன் 11 |



Date: 11/08/2026 to 14.08.2026

**Event: Vocational Training on bee keeping under SCSP**

Venue : Pilichikuzhi village of Jayankondam block

Details:

1. 1.Inagurated  vocational training on beekeeping
2. 2.First day -Delivered lecture about introduction about bees and it's uses, type of bees and it's roles and honey production

No. Of participants - 30

Team : SMS(PP) & SMS(AE)






ICAR CREED KVK Ariyalur Dt TN

Date: 11.08.2026

Village: Vetriyur, part of the Ariyalur block.

Event: Inauguration program of IMTI Training Village-adapted program.

Details:

1. Director General, Director, Joint Director, IMTI Assistant Professors, and KVK Senior Scientist and Head of KVK participated in this event.
2. Discussed and finalised the training topics of the village-adapted program.
3. Discussed with the farmers the importance of this training and income generation activities.
4. IMTI Director General and Director also discussed with farmers. Farmers also told their exact needs.

No of farmers: 80

Team: SS&H, SMS(AS) and SMS(Ag)

ICAR CREED KVK Ariyalur Dt TN

Date:11.08.2026

Village: Vetriyur, part of the Ariyalur block.

Event: Diagnostic field visit

Details:

1. Fish pond advise for farmers.
2. The farmer was encouraged to adopt scientific fish culture practices for improving productivity and farm income.
3. Provided technical guidance on proper water management, feeding schedule and timely harvesting.
4. Advised the farmer to maintain proper records of feed usage, fish growth, mortality, input costs and income for assessing profitability.

No of participants:3.

Team: SS&H,SMS(AS) ,SMS(Ag)



Date : 11.08.2026.

Village: Vetriyur village, part of the Ariyalur

Crop: Chilli

**Event: Diagnostic Field visit, On-farm technical advisory**

Field Visit Details:

1. Visited the chilli field to assess the crop growth, plant health and overall field condition.
2. Observed the crop for pest and disease incidence, particularly mites, fruit borer and viral diseases.
3. Recommended proper weed management and field sanitation to reduce pest and disease incidence.
4. Suggested installation of yellow/blue sticky traps and pheromone traps for monitoring and managing important insect pests. Advised the farmer on the application procedures for Neem Oil.
5. Emphasised the use of integrated pest management



Date: 15/8/2026

Event: **Received Appreciation from the Revered District Collector madam on the occassion of celebration of 80th Independence day at Ariyalur Dt. This appreciation we received for the meritorious services rendered to farmers in delivering technologies to the farmers of the District to cope with El Nino effects.**





ARIYALUR DISTRICT

INDEPENDENCE DAY CELEBRATIONS - 2026

*Certificate of Appreciation*

*Thiru/ Tmt/ Selvi* ....CREED KVK, CHOLAMADEVI.... *is awarded this certificate of Appreciation for rendering meritorious service while discharging the duties.*

ARIYALUR
15.08.2026

N.MIRUNALINI, I.A.S.,
District Collector,
Ariyalur.

Date: 22.08.2026

Place: Keelkanavai village of Permabalur

**Event: Cross learning to promote green fodder during the effect of El-Nino.**

Details:

1. Exposure and cross learning visits taken towards identifying alternative different fodder varieties to improving the fodder potential in the district against El-Nino impact.
2. Spineless forage cactus (Opuntia ficus-indica) or spineless prickly pear, is a vital drought-resilient green fodder. It can be a cost-effective solution for the livestock keepers of semi-arid tropics by providing a stable source of nutritive forage and cultivation required very less water.
3. Maize cross napier, Jinjuwa grass, Setaria grass and Super Mombasa F1 grass are highly potential of high-yielding perennial tropical forage. It provides excellent nutrition for cattle, sheep, goats, and other livestock with high palatability, fast regrowth every 25 to 30 days, and strong drought tolerance.
4. As a part KVK Ariyalur will create a model demo plot of different new drought tolerant fodder collections and also facilitate farmers by seed production activity in KVK farm during the effect of El-Nino.

Team: SSH & SMS (Ag. & Horti.)









Date : 25.08.2026

**Event: Newspaper article on TNAU boosters in various crops and it's uses**



விவசாயிகள் வேளாண் பயிர்களில் அதிக மகசூல் பெற

# பூஸ்டர், டானிக்குகள் குறித்த தொழில்நுட்பம்

**வேளாண் விஞ்ஞானி ஆலோசனை**

தா.பழூர், ஆக.25: அரியலூர் மாவட்டம் தா.பழூர் அருகே உள்ள சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் வேளாண் பயிர்களில் விவசாயிகள் அதிக மகசூல் பெற கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப வழிமுறைகள் குறித்து வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா தெரிவித்துள்ளார்.

மனிதனுக்கு சரிவிகித உணவு எவ்வளவு அவசியமோ அது போல பயிர்களுக்கும் நுண்ணூட்டச்சத்து மிகவும் அவசியமான ஒன்றாகும். ஊட்டச்சத்தை பயிர்களுக்கு அதன் தேவைக்கேற்றவாறும், மண்ணின் தரத்திற்கு ஏற்றவாறு அளிப்பதே சாலச்சிறந்தது. இதன் மூலம் பயிர்களில் போதிய மகசூலை பெற இயலும். நுண்ணூட்டச்சத்து அதனை அளிக்கும் தருணம் மற்றும் முறைகள் பயிருக்கு பயிர் வேறுபடுகிறது. பெரும்பாலும் விவசாயிகள் பேரூட்டச்சத்திற்கு முக்கியத்துவம் அளித்து நுண்ணூட்ட சத்துக்களை கருத்தில் கொள்ளாமல் அவைகளை பயிர்களுக்கு அளிக்காமல் விட்டுவிடுகின்றனர். இதனால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. நுண்ணூட்டச்சத்துக்கள் மூலம் மகசூலை அதிகரிக்க தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பூஸ்டர் மற்றும் டானிக்குகளை கண்டுபிடித்துள்ளது.

உளுந்து பயிரில் அதிக மகசூல் பெற பூ மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 2 கிலோ பயறு ஒண்டர் பூஸ்டரினை தேவையான அளவு ஒட்டும் திரவம் மற்றும் 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிப்பதன் மூலம் பூக்கள் உதிர்வது குறைவும், வறட்சியை தாங்கும் தன்மை கிடைக்கும் மற்றும் பயறு விளைச்சலில் 20 சதம் மகசூல் கூடுதலாக கிடைக்கும். நிலக்கடலை சாகுபடியின் போது பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் ஏக்கருக்கு 2 கிலோ நிலக்கடலை ரிச் பூஸ்டரினை 200 லிட்டர் தண்ணீர் மற்றும் தேவையான அளவு ஒட்டும் திரவம் கலந்து தெளிப்பதன் மூலம் அதிக பூ பிடிக்கும் திறன் மற்றும் 15 சதவீதம் மகசூல் கூடுதலாக கிடைப்பதோடு பொக்கு கடலைகளின் அளவு குறைந்து பருப்பு முழுமையாக, திரனாக நன்கு எண்ணெய் சத்தும் நிறைந்து காணப்படும்.

மக்காச்சோள பயிர்களில் மக்காச்சோள மேக்சிம் என்கிற பூஸ்டரினை ஏக்கருக்கு 3 கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவம் தெளிப்பதன் மூலம் மணி பிடிக்கும் திறன் அதிகரிப்பதோடு, மகசூல் எப்போதும் பெறுவதைவிட 20 சதம் கூடுதலாக கிடைக்கும். கரும்பிற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கி கலந்து பூஸ்டரினை கரும்பு பூஸ்டரினை கரும்பு நட்ட 45வது நாள் 1 கிலோவும், 60-ம் நாள் 1.5 கிலோவும் மற்றும் 75வது நாள் 2 கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிப்பதன் மூலம் கரும்பின் இடைக்கணுக்களின் நீளம் கூடும். கரும்பின் வளர்ச்சி மற்றும் எடை அதிகரிக்கும் மற்றும் மகசூல் 20 சதம் கூடுதலாக கிடைக்கும். தென்னை மரத்தில் குரும்பு கொட்டுதல் மற்றும் காய் பெரிதாக கிடைக்க தென்னை டானிக்கை வேர் மூலம் செலுத்துதல் வேண்டும். அதாவது தென்னை டானிக்கை மரத்திலிருந்து இரண்டு அடி தூரத்தில் சுமார் நான்கு அங்குல ஆழத்தில் உள்ள வெள்ளை நிற வேர் ஒன்றை தேர்வு செய்து, வேரின் நுனியை கத்தி கொண்டு சாய்வாக சீவி விடவும். பின்பு டானிக் உள்ள பையின் அடிவரை வேரை நுழைத்து, வேரையும் பையின் மேல் பாகத்தையும் நூலால் கட்டி, டானிக் சிந்தாமல் மண்ணை அணைத்து விடவும். மண்ணின் ஈரத்தன்மை குறைவாக இருந்தால் ஒரு மணிநேரத்தில் டானிக்கை வேர் உறிஞ்சிவிடும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை 200 மில்லி டானிக்கை வேர் மூலம் செலுத்துவதன் மூலம் இலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும், பச்சையம் கூடும், பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். குரும்பை கொட்டுதல் குறையும், காய்கள் பெரிதாகி பருப்பு எடை கூடும் மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தி கூடும். பயிறுகளுக்கான பூஸ்டர் மற்றும் டானிக் கிரீடு வேளாண் அறிவியல் மையம் சோழமாதேவியில் கிடைக்கும். எனவே விவசாய பெருமக்கள் அனைவரும் மேற்கண்ட பயிர்களின் சாகுபடியின் போது தகுந்த தருணத்தில் பூஸ்டரினை தெளித்து அதிக மகசூல் பெறலாம்.

**பருத்தியில் கூடுதலாக 18 சதவீதம் மகசூல்**

பருத்தி பயிருக்கு பருத்தி பிளஸ் பூஸ்டரினை ஏக்கருக்கு 2.5 கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளிப்பதன் மூலம் பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும், காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கு வழிவகுக்கும் மற்றும் மகசூல் 18 சதவீதம் கூடுதலாக கிடைக்கும்.

Date: 28.08.2026

Village: Keelakulathur of Thirumanur block.

**Event: Diagnostic field visit to Tapioca field for drought mitigation during EL Nino period.**

Details:

1. A diagnostic field visit to Tapioca grown in Rabi season crops was conducted.
2. Identified the drought situation and recommendation given for TNAU Cassava booster spraying affected irrigation.
3. Recommended the mulching, adequate irrigation and spraying of growth stimulator to protect the crops under this El Nino period.
4. Awareness created on the impact of El-Nino and weather informations for Tapioca crop.

No of farmers: 5

Team SMS (Horti)

